தமிழ்நாடு அரசு

ஐந்தாம் வகுப்பு

இரண்டாம் பருவம்

தொகுதி 1

விற்பனைக்கு அன்று

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு
இலவசப் பாடநூல் வழங்கும்
திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

பள்ளிக் கல்வித்துறை

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2012
திருத்திய பதிப்பு – 2013, 2017

(பொதுப் பாடத்திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்ட முப்பருவ நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்

கல்லூரிச் சாலை, சென்னை – 600 006.

இந்நூல் 80 ஜி. எஸ். எம். மேப்லித்தோ தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

விலை : ரூ.

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

பாடநூல் வலைதளம்

www.textbooksonline.tn.nic.in

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத தாகூர்

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

THE NATIONAL ANTHEM

Jana–gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Punjaba-Sindhu-Gujarata-Maratha-
Dravida-Utkala-Banga
Vindhya-Himachala-Yamuna-Ganga
Uchchhala-jaladhi-taranga
Tava subha name jage,
Tava Subha asisa mage,
Gahe tava jaya-gatha.
Jana-gana-mangala-dayaka jaya he
Bharata-bhagya-vidhata
Jaya he, jaya he, jaya he,
Jaya jaya, jaya, jaya he.

- Rabindranath Tagore.

SHORT VERSION

Jana-gana-mana-adhinayaka jaya he
Bharata-bhagya-vidhata.
Jaya he, jaya he, jaya he
Jaya jaya, jaya, jaya he.

AUTHENTIC ENGLISH TRANSLATION OF THE NATIONAL ANTHEM

Thou art the ruler of the minds of all people,
Thou dispenser of India's destiny.
Thy name rouses the hearts of the Punjab, Sind,
Gujarat and Maratha, of Dravid, Orissa and Bengal.
It echoes in the hills of the Vindhyas and Himalayas,
mingles in the music of the Yamuna and Ganges
and is chanted by the waves of the Indian Sea.
They pray for Thy blessings and sing Thy praise
The saving of all people waits in Thy hand,
Thou dispenser of India's destiny.
Victory, Victory, Victory to Thee.

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே
தமிழணங்கே!
உன்சீரிளமைத் திறம் வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணியம்' பெ. சுந்தரனார்.

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன்' என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் – பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

INVOCATION TO GODDESS TAMIL

Bharat is like the face beauteous of Earth clad in wavy seas;

Deccan is her brow crescent-like on which the fragrant 'Tilak' is the blessed Dravidian land.

Like the fragrance of that 'Tilak' plunging the world in joy supreme reigns Goddess Tamil with renown spread far and wide.

Praise unto 'You, Goddess Tamil, whose majestic youthfulness, inspires awe and ecstasy.'

THE NATIONAL INTEGRATION PLEDGE

“I solemnly pledge to work with dedication to preserve and strengthen the freedom and integrity of the nation.”

“I further affirm that I shall never resort to violence and that all differences and disputes relating to religion, language, region or other political or economic grievances should be settled by peaceful and constitutional means.”

A STUDENT'S VOW BEFORE MOTHER INDIA

Name :

Class : School :

I shall overcome the obstacles raised by caste and communal prejudices and work for the greatness of my Motherland putting to the fullest use the benefits that I derive through education.

Vande mataram!

Signature



பொருளடக்கம்

தமிழ் (1–41)

இயல்	பாடத் தலைப்பு	பக்கம்
1.	திருக்குறள் *	1
	கலை உலகில் கலைவாணர்	
	வெற்றியின் முதற்படி	
2.	பெண்கல்வி*	15
	உணவுத் திருவிழா	
	ஒற்றுமையே பலம்	
3.	கும்மியடி பெண்ணே கும்மியடி *	29
	சித்திரைப் பொருட்காட்சி	
	காடையின் நுண்ணறிவு	

இப்பாடநூலில் * இவ்வுடுக்குறியிட்ட
பாடல்கள் மனப்பாடப்பகுதி

CONTENTS

ENGLISH (42 - 90)

UNIT	TITLE	PAGE No.
1.	Prose – Health is Wealth Poem – Keeping clean	47
2.	Prose – The Nightingale of India Poem – The Flag goes by	63
3.	English Grammar – Happy to learn English	78

தமிழ்

ஐந்தாம் வகுப்பு

இரண்டாம் பருவம்

வினைத்திட்பம்

1. சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

பாடல்பொருள்

இச்செயலை இவ்வாறு செய்து முடிக்கலாம் எனச் சொல்லுதல் எவர்க்கும் எளிது; ஆனால், சொல்லியபடி செய்து முடித்தல் அரிது.

சொல்பொருள்: சொல்லியவண்ணம் – சொல்லியபடி

2. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து.

பாடல்பொருள்

ஒருவரின் தோற்றத்தைக் கொண்டு இகழ்தல் கூடாது; ஏனெனில், உருண்டோடும் பெரிய தேரைக் காப்பது, அதன் சிறிய அச்சாணியே.

சொல்பொருள்

உருவு	–	உருவம்
எள்ளாமை	–	இகழ்ந்து பேசாமை
அன்னார்	–	போன்றவர்

பெருமை

1. பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து.

பாடல்பொருள்

பெருந்தன்மையான குணம் கொண்டவன், எல்லாரிடமும் எப்பொழுதும் பணிவாக நடந்துகொள்வான். இழிந்த குணம் உடையவன், எப்போதும் தன்னைத்தானே பாராட்டிப் புகழ்ந்து கொள்வான்.

சொல்பொருள்

பணியுமாம் – பணிவாக நடப்பர்

சிறுமை – இழிந்த குணம்

2. பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

பாடல்பொருள்

பெருமை உடையவர் பிறரால் எளிதில் செய்ய இயலாத அரிய செயல்களை, விடாமுயற்சியுடன் செய்து முடிக்கும் ஆற்றல் உடையவர் ஆவர்.

சொல்பொருள்

ஆற்றுவார் – செய்வார்

அருமை – எளிதில் செய்ய இயலாத அரிய செயல்

பயிற்சி

அ. பிரித்து எழுதுக.

1. உருவுகண்டு = _____
2. பெருந்தேர் = _____

ஆ. சொற்றொடரில் அமைத்து எழுதுக.

1. இகழ்தல் : _____
2. பாராட்டு : _____
3. விருப்பம் : _____
4. சிறுமை : _____

இ. விடை எழுதுக.

1. ஒருவரின் உருவத்தைக் கண்டு இகழ்தல் கூடாது, ஏன் ?
2. அரிய செயலைச் செய்து முடிப்பதற்கு நமக்குத் தேவையானது எது ?

இணைந்து செய்வோம்

அ. உரிய விடையைத் தெரிவுசெய்து சரிக்குறி (✔) இடுக.

அ. பெருமைக் குணம் உடையவர் யார் ?

1. அனைவருக்கும் உதவி செய்பவர்.
2. யாருக்கும் உதவாதவர்.
3. பிடித்தவருக்கு மட்டும் உதவி செய்பவர்.

ஆ. இழிந்த குணம் உடையவர் யார் ?

1. பிறர் பொருளை எடுத்துக்கொள்பவர்.
2. உரியவரின் ஒப்புதலோடு எடுத்துக்கொள்பவர்.
3. அதனைப்போலவே ஒன்றனை வாங்கிக் கொள்ளலாம் என நினைப்பவர்.

இ. பணிவு என்பது

1. யார் எதனைக் கூறினாலும் அப்படியே ஏற்றுக்கொள்ளுதல்.
2. யார் எதனைக் கூறினாலும் மறுத்துப் பேசுதல்.
3. உரியவற்றை ஏற்றுக்கொள்ளுதல். தவறு எனில், தன் கருத்தை விளக்கமாகக் கூறுதல்.

சிந்திக்கலாமா ?

உரைநடை

கலை உலகில் கலைவாணர்

அன்று, நாடகம் முடிந்ததும் மக்கள் கூட்டம், மேடையை நோக்கி ஓடியது. அந்நாடகத்தில் மிகச் சிறப்பாக நடித்திருந்த சிறுவனுக்குப் பாராட்டுகள் குவிந்தன. விழாவிற்குத் தலைமையேற்ற சதாவதானி செய்குத்தம்பிப் பாவலர், "இச்சிறுவன் வருங்காலத்தில் மாபெரும் மேதையாக விளங்கப்போகிறான்; இவனால், தமிழ்நாடே பெருமையடையப் போகிறது" என்று பாராட்டிப் பேசினார். அந்த அளவிற்கு அனைவரின் கவனத்தையும் ஈர்த்த அச்சிறுவன் யார் தெரியுமா?

நாஞ்சில் நாடு என அழைக்கப்படும் குமரி மாவட்டம், எண்ணற்ற கலைஞர்களையும், செந்தமிழ் அறிஞர்களையும் நல்கியது. அம்மாவட்டத்திலுள்ள ஒழுகினசேரியில், 1908ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29ஆம் நாள், சுடலைமுத்து–இசக்கியம்மாளுக்கு மகனாகப் பிறந்தவர், பார்போற்றும் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்.

இளம் வயதிலேயே கல்வி கற்கும் வாய்ப்பை இழந்த அவர், குடும்பத்திற்கு உதவிட, நாடக அரங்குகளில் குளிர்பானங்கள் விற்றார். அவரது நல்ல குரல் வளமும், பாடும் திறனும், நகைச்சுவைப் பேச்சும் நாடகத்தில் நடிக்கும் வாய்ப்பைப் பெற்றுத் தந்தன. அவர் சிரிப்பு நடிகராக மட்டுமல்லாமல், சிந்தனைக்குரிய செய்திகளைச் சொல்பவராகவும் விளங்கினார். அவருடைய நகைச்சுவைப் பேச்சு படித்தவர் மட்டுமல்லாது, பாமரரும் மகிழ்ந்து போற்றும்வண்ணம் இருந்தது.

அவர் பாடுவார், ஆடுவார், எழுதுவார், உரையாற்றுவார், நடிப்பார், நடிக்கவும் வைப்பார், சிரிக்கச் சிரிக்கப் பேசி மக்களைச் சிந்திக்கவும் வைப்பார். பிறர் மனத்தைப் புண்படுத்தாமல் பண்படுத்தும் நகைச்சுவையைக் கையாள்வதில், அவர் சிறந்து விளங்கினார்.

என்.எஸ். கிருஷ்ணன், எழுத்தாளர் மாநாடு ஒன்றில் பேசினார். அங்குக் கூடியிருந்தவர்களைப் பார்த்து, "இன்று எழுத்தாளர்கள் எழுதுகோலில் எப்படிப்பட்ட மையைத் தொட்டு எழுதுகிறார்கள் தெரியுமா? சிலர், பெருமை தொட்டு எழுதுகின்றனர்; பலர், தற்பெருமை தொட்டு எழுதுகின்றனர்; வேறு சிலர், பொறாமை தொட்டு எழுதுகின்றனர்; மற்றும் சிலர், பழைமை தொட்டு எழுதுகின்றனர்.

இவற்றையெல்லாம்கூட ஏற்றுக்கொள்ளலாம். "ஆனால், யாரும் தொடவே கூடாத, தீமை தரக்கூடிய சில "மை"கள் உள்ளன. அவை என்னென்ன தெரியுமா?" எனக் கேட்டார். கூட்டத்தினர் விடை தெரியாமல், என்ன சொல்லப்போகிறார் என ஆர்வத்துடன் உன்னிப்பாகக் கவனித்தனர். "கயமை, பொய்ம்மை, மடமை, வேற்றுமை ஆகியவைதாம் அவை" என்றார். அனைவரும் கையொலி எழுப்பி மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்.

எழுத்தாளர்கள் சமுதாயக் கடமையாகத் தொட்டு எழுத வேண்டிய "மை"கள் என்னென்ன? என, அவையோரைப் பார்த்துக் கேட்டார். அவையோர் விழிக்க, அவரே விடை கூறினார். "நன்மை தரக்கூடிய நேர்மை, புதுமை, செம்மை, உண்மை" என்றார், அவர். அரங்கத்தில் கையொலி அடங்க வெகு நேரமாயிற்று. மேலும் அவர், "மக்கள் மனத்திலிருந்து" நீக்க வேண்டிய "மைகள்" வறுமை, ஏழைமை, மடமை, கல்லாமை, அறியாமை எனச் சொன்னபோது, அவையோர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. 'மை' என்னும் சொல்லைக்கொண்டு என்.எஸ்.கிருஷ்ணன் ஆற்றிய செந்தமிழ்ச்சொல் விளையாடல், அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

"வாய்விட்டுச் சிரித்தால் நோய்விட்டுப் போகும்", "சிரிக்கத் தெரிந்தவன் மனிதன் மட்டுமே! சிரித்து வாழ வேண்டும்" எனக் கூறிய அவர், திரைப்படத்தில் சிரிப்பின் சிறப்பை விளக்கி...

சிரிப்பு பற்றிய பழமொழிகளைத் திரட்டுங்கள்

சிரிப்பு... இதன்
சிறப்பைச் சீர்தூக்கிப் பார்ப்பதே நமது பொறுப்பு.
சிந்திக்கத் தெரிந்த மனித இனத்திற்கே
சொந்தமான கையிருப்பு
எந்த ஜீவராசியும் செய்ய முடியாத
செயலாகும் இந்தச் சிரிப்பு
மனம் கறுப்பா வெளுப்பா என்பதை எடுத்துக்
காட்டும் கண்ணாடி சிரிப்பு ...
களைப்பை நீக்கிக் கவலையைப் போக்கி
மூளைக்குத் தரும் சுறுசுறுப்பு ...

என்னும் பாடலைப் பாடிச் சிந்தனையைத் தூண்டுகிறார். அவரது நகைச்சுவை உணர்வைப் பாராட்டி முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், 'நகைச்சுவை அரசு' என்னும் பட்டத்தை வழங்கினார்.

நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்தனார் தலைமையில் நடராஜா கல்விக்கழகம் ஏற்பாடு செய்த விழாவில், 'கலைவாணர்' என்னும் பட்டம் அவருக்கு வழங்கப்பட்டது; 'நாகரிகக் கோமாளி' என்னும் பட்டமும் உண்டு.

எதிர்காலத்தில் உலகில் அறிவியல் வளர்ச்சி எப்படியிருக்கும் என்பதனை அக்காலத்திலேயே திரைப்படங்களில்,

விஞ்ஞானத்தை வளர்க்கப் போறேண்டி – மேனாட்டாரை
விருந்துக் கழைச்சுக் காட்டப் போறேண்டி
.....
நெல்லு குத்த மாவரைக்க
நீரிறைக்க மிசினு
அல்லும் பகலும் ஆக்கி அரைக்க
அதுக்கொரு மிசினு...
எனப் பாடியுள்ளார்.

ஆம், இன்று நாம் பயன்படுத்தும் மின் அரைவை இயந்திரங்களைப் பற்றி அன்றே கூறியிருப்பது வியப்பிலும் வியப்பு.

நகைச்சுவைச் சிந்தனை உணர்வுக்கு, அப்பாற்பட்டுத் துன்பப்படுவோருக்கு உதவும் அரிய பண்பு அவரிடம் இருந்தது. ஒரு முறை, துணை நடிகர் ஒருவர் உடனே ஊர் திரும்ப வேண்டியிருந்தது. பணம் இல்லாததனால் அவர் வருத்தத்துடன் இருந்தார். இதனை அறிந்த கலைவாணர் துணை நடிகரை அழைத்தார். "என் பெட்டியில் பணம் இருக்கிறது; எடுத்துக்கொண்டு ஊர் போய்ச்சேர்" என்றார். நன்றி கூறிச் சென்ற துணை நடிகர் மீண்டும் திரும்பி வந்தார்.

உன் நண்பரிடம் உனக்குப் பிடித்த பண்பு எது?

“ஐயா! பணத்தை எடுத்துக்கொள்ளச் சொன்னீர்கள், ஆனால், பெட்டிச் சாவியைத் தரவில்லையே?” எனக் கேட்டார். கலைவாணர் சிரித்தார். “பெட்டிச்சாவியா? நான் என் பெட்டியை எப்போது பூட்டினேன்? அது எப்பொழுதும் திறந்துதான் இருக்கும்; போய் உனக்கு வேண்டியதனை எடுத்துக்கொள்” எனக் கூறினார். பணம் வைத்திருக்கும் பெட்டியை மட்டுமல்லாமல், மனத்தையும் எப்போதும் அவர் திறந்தே வைத்திருந்தார். இவ்வாறாக, 'இல்லை' என வருவோருக்கு அள்ளி வழங்கும் வள்ளலாகத் திகழ்ந்தார் கலைவாணர்.

இத்தகு பெருமை வாய்ந்த கலைவாணருக்குப் பெருமைசேர்க்கும் வண்ணம் தமிழக அரசு சென்னையில் சிலை நிறுவியுள்ளது.

பயிற்சி

அ. அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

மேதை –

நல்கியது –

பார் –

பாமரர் –

கயமை –

மடமை –

ஆ. பிரித்து எழுதுக.

1. தலைமையேற்ற = _____
2. வருங்காலத்தில் = _____
3. வைத்திருக்கும் = _____
4. என்னென்ன = _____

இ. சேர்த்து எழுதுக.

1. வாய்ப்பு + அளித்தனர் = _____
2. கை + ஆள்வதில் = _____
3. கூடி + இருந்தவர்கள் = _____
4. வைத்து + இருக்கும் = _____
5. அ + காலத்திலேயே = _____

ஈ. எதிர்ச்சொல் அமைத்துச் சொற்றொடரை நிரப்புக.

1. இளமையில் கற்பது எளிது; _____ கற்பது அரிது.
2. ஒற்றுமையுடன் வாழ்வது நன்று; வேற்றுமையை வளர்ப்பது _____.
3. நாம் புதுமையை ஏற்போம்; _____ காப்போம்.
4. நல்லொழுக்கம் பெருமை சேர்க்கும்; தீயொழுக்கம் _____சேர்க்கும்.
5. குழந்தைகளைப் புகழ்தல் வேண்டும்; _____கூடாது.
6. பகலில் தெரிவது கதிரவன்; _____தெரிவது விண்மீன்.
7. நான் உண்மை பேசுவேன் ; _____பேசமாட்டேன்.

உ. விடை எழுதுக.

1. எழுத்தாளர்கள் எப்படிப்பட்ட மையைத் தொட்டு எழுதவேண்டும் என என்.எஸ்.கிருஷ்ணன் கூறுகிறார் ?
2. சிரிப்பின் சிறப்பை என்.எஸ்.கிருஷ்ணன் எவ்வாறு விளக்குகிறார் ?
3. கலைவாணர் மனிதநேயர்– விளக்குக.
4. அறிவியல் வளர்ச்சிபற்றிக் கலைவாணர் கூறியவை யாவை ?

அ. வகுப்பறையில் பேசுக.

நண்பர்களுடன் இணைந்து ஏதேனும் நகைச்சுவை உரையாடலை நடித்துக் காட்டுக.

ஆ. நகைச்சுவை உரையாடலை எழுதுக.

சிரிக்கலாம் வாங்க!

யானை : நான் விரைவாக ஓடிக் கடையில் என்ன வாங்கி இருப்பேன் ?

குரங்கு : தெரியலையே!

யானை : வேறு என்ன ? மூச்சுதான்!

ஒட்டகச்சிவிங்கி :

அணில் :

மான் :

பாம்பு :

நீர்யானை :

காண்டாமிருகம் :

இ. பேச்சு வழக்கில் அமைந்த சொற்றொடர்களை இலக்கிய வழக்கில் எழுதுக.

கேளுங்க ...! கொழந்தைகளா...! அந்தக் காலத்துல எங்களுக்கு வெவரம் பத்தாது. அதனால பொம்பல புள்ளைய பள்ளிக்கூடம் அனுப்பல. பள்ளிக்கூடம் ஒரு கனவா இருந்துச்சி. ஆனா இப்ப ஆம்பள பொம்பள எல்லாமே ஒன்னுதான். யாருமே ஒசந்தவங்க தாழ்ந்தவங்க என்னும் பேச்சிக்கே இடமில்லை.

(எ.கா.) கேளுங்க ...! கொழந்தைகளா...!

– பேச்சு வழக்கு

கேளுங்கள் ...! குழந்தைகளே...!

– இலக்கிய வழக்கு

ஈ. கீழ்க்காணும் தொடர்களை உரிய ஒலிப்புடன் மீண்டும் மீண்டும் சொல்லிப் பழகுங்கள். பிழையின்றி யார் பலமுறை கூறுகிறார்களோ ? அவர்களே வெற்றிபெற்றவர்கள். போட்டியிடுங்கள், வெல்லுங்கள்.

1. கடல் வற்றட்டும் கருவாடு தின்றிடலாம் எனக் குடல் வற்றி இளைத்ததாம் கோடியக்கரைக் கொக்கு.

2. வண்ணவண்ணப் பூக்கள் கண்ணைக் கவரும்,
எண்ணமெல்லாம் கன்னலாய் இனிக்கும்.

3. உருளுது புரளுது உலகம் சுழலுது, ஓடுது ஆடுது கூடுது குறையுது,
இரவும் பகலும் இருட்டுது மிரட்டுது.

உ. நிரப்புக.



சிந்தித்து நிரப்புக.











குழுவாகச் செய்வோம்

1. கட்டுரை எழுதுவோம்

1. பாடப்பகுதியின் முதல் பக்கத்தைப் படித்துப் பார்க்க.
2. அப்பகுதியில் இடம் பெற்றுள்ள முக்கியக் கருத்துகளை அடிக்கோடிடுக.
3. அவற்றைப் பட்டியலிட்டுக் கீழ்க்காணும் கட்டுரையின் பொருளுரையில் எடுத்து எழுதுக.

கலைவாணரின் இளமைப் பருவம்

முன்னுரை

பார்போற்றும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் இளமைப் பருவம் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பொருளுரை

_____

_____

_____

முடிவுரை

பிறரின் மனம் புண்படாமல் சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த கலைவாணரை நாமும் பின்பற்றுவோம்.

2. மேற்கண்ட கட்டுரையைப்போல் பாடப்பகுதியின் இரண்டு மற்றும் மூன்றாம் பக்கங்களுக்குக் குழுவாக இணைந்து கட்டுரைகள் எழுதுக; தகுந்த தலைப்பிடுக.

உன் வீட்டில் உள்ளவர்கள் பேசும் பேச்சுவழக்குச் சொற்களையும் அவற்றுக்கான இலக்கிய வழக்குச் சொற்களையும் எழுதுக.

வெற்றியின் முதற்படி

"அம்மா! இன்று மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன. நான் ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொள்ளப் போகிறேன். எனக்குத்தான் முதற்பரிசு கிடைக்கும். அதற்காகப் பல நாளாகப் பயிற்சி எடுத்துவருகிறேன்" என்றான் செந்தில்.

"மகனே! உனக்குத்தான் பரிசு. உன்னை வெல்ல எவர் இருக்கிறார்! நம்பிக்கையுடன் முயற்சி செய்" என வாழ்த்தினார், அவன் தாய்.

எதிர்பார்த்தபடியே செந்திலுக்கு முதற்பரிசு கிடைத்தது. அவன் வெற்றிக் கோப்பையுடன் வீட்டுக்கு வந்தான். அம்மா விருந்து சமைத்துக்கொண்டு இருந்தார். தான் வெற்றி பெற்ற செய்தியை யாரோ அம்மாவிற்கு முன்னதாகவே தெரிவித்து இருக்கிறார்கள். அதனைக் கொண்டாடத்தான் அம்மா விருந்து செய்கிறார் என நினைத்தான்.

தாயை அணைத்துக் கொண்ட செந்தில், "அம்மா! நான் வெற்றி பெற்றது உங்களுக்கு எப்படித் தெரியும்?" எனக் கேட்டான். 'மகனே! நீ வெற்றி பெறுவாய் என எனக்கு உறுதியாகத் தெரியும். இந்த அட்டையைப் பார்' என்றார், அம்மா.

"மகனே! உன் வெற்றிக்கு வாழ்த்துகள். அதற்காகத்தான் இந்த விருந்து" என அதில் எழுதியிருந்தது. குடும்பத்தினருடன் செந்தில் விருந்தை மிக மகிழ்ச்சியுடன் சுவைத்துச் சாப்பிட்டான்.

சிறிது நேரத்திற்குப்பின் அம்மா கொடுத்த அந்த அட்டையைச் செந்தில் கையில் எடுத்தான்; பின்பக்கமும் ஏதோ எழுதி இருப்பதுபோலத் தெரிந்தது; திருப்பிப் பார்த்தான்.

அதில், 'அன்பு மகனே! தோல்வி ஏற்பட்டதற்காக வருந்தாதே; எதனையும் மகிழ்ச்சியாக ஏற்றுக்கொள்; தோல்வியே வெற்றியின் முதற்படி; முயற்சி செய்; வெற்றி பெறுவாய்! அதற்காகத்தான் இந்த விருந்து' என எழுதியிருந்தது. செந்தில் மகிழ்ச்சியோடு தன் அம்மாவைத் திரும்பிப் பார்த்தான்...

அட்டையின் இருபுறமும் இருவேறு கருத்துகள் எழுதிய செந்திலின் அம்மாவைப் பற்றி என்ன நினைக்கிறாய்?

சிந்திக்கலாமா? வா

பரிசு யாருக்கு? உன் கருத்தைக் கூறுக.

பெண்கல்வி

தலைவாரிப் பூச்சூடி உன்னைப் – பாட
சாலைக்குப் போஎன்று சொன்னாள் உன் அன்னை!

சிலைபோல ஏனங்கு நின்றாய்? – நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்து கின்றாய்?
விலைபோட்டு வாங்கவா முடியும்? – கல்வி
வேளைதோ றும்கற்று வருவதால் படியும்!
மலைவாழை அல்லவோ கல்வி? – நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!

படியாத பெண்ணா யிருந்தால் – கேலி
பண்ணுவார் என்னை இவ்வூரார் தெரிந்தால்
கடிகாரம் ஓடும்முன் ஓடு! – என்
கண்ணல்ல? அண்டை வீட்டுப் பெண்களோடு
கடிதாய் இருக்குமிப் போது! – கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியுமப் போது!

கடல்சூழ்ந்த இத்தமிழ் நாடு – பெண்
கல்வி பெண்கல்விஎன் கின்றதன் போடு.

– பாவேந்தர் பாரதிதாசன்

ஆசிரியர் குறிப்பு



பெயர்	–	பாரதிதாசன்
இயற்பெயர்	–	சுப்புரத்தினம்
ஊர்	–	புதுச்சேரி
பெற்றோர்	–	கனகசபை, இலக்குமி அம்மையார்
காலம்	–	29–04–1891 முதல் 21–04–1964 வரை
சிறப்புப் பெயர்கள்	–	பாவேந்தர், புரட்சிக்கவிஞர்

பயிற்சி

அ. அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

அன்னை –

பாடசாலை –

படியும் –

புதல்வி –

அண்டை வீடு –

கடிதாய் –

ஆ. பிரித்து எழுதுக.

1. பூச்சூடி = _____
2. ஏனங்கு = _____
3. இவ்வூரார் = _____
4. கண்ணல்ல = _____

குழுவாகச் செய்வோம்

அ. பெண்கல்வியின் சிறப்பை எடுத்துக் கூறும் வில்லுப்பாட்டு ஒன்றனை அமைத்து , உன் நண்பர்களுடன் இணைந்து பாடுக.

ஆ. கலந்துரையாடுக.

நிகழ்வு–1

தேவி மூன்றாம் வகுப்பில் படிக்கும் சிறுமி. அவளுக்குத் தம்பி பிறந்ததால், தம்பியைப் பார்த்துக்கொள்வதற்காகப் பள்ளிக்குச் செல்ல வேண்டா எனபெற்றோரால் நிறுத்தப்பட்டாள்.

நிகழ்வு–2

மணிமாலா, ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். அவள் அம்மா, சில வீடுகளில் வீட்டுவேலை செய்து பணம் ஈட்டி வந்தார். அம்மாவுக்குத் திடீரென உடல் நலம் சரியில்லை; அதனால் மணிமாலா பள்ளியிலிருந்து நிறுத்தப்பட்டு வேலைக்கு அனுப்பப்பட்டாள்.



மேற்கூறிய நிகழ்வுகளிலிருந்து நீ தெரிந்து கொண்டது என்ன ? இதுபோன்ற பெண் குழந்தைகள் கல்வி பெற என்ன செய்யலாம் எனக் கலந்துரையாடுக.

செயல் திட்டம்

பெண்கல்வியின் சிறப்புகளைக் கூறும் பாடல்களைத் திரட்டுக; அவற்றுக்கு ஏற்ற படங்களை வரைந்தோ ஒட்டியோ படத்தொகுப்பு அமைக்க.

சிந்திக்கலாமா ?

வீட்டுவேலைகளில் நந்தினி, அவள் தம்பி, அப்பா மூவரும் பங்கேற்பார்கள்

இதனை மணி ஏளனம் செய்கிறான்

வீட்டுவேலைகளை எவ்வாறு பிரித்துக்கொண்டு செய்யலாம் ?
உன் கருத்துகளைக் கூறுக.

பாதிப்படம் இங்கே, மீதிப்படத்தை வரைந்து மகிழ்க.



உன் விருப்பம்போல் செய்து மகிழ்க.





உரைநடை

உணவுத்திருவிழா

பாரதிதாசன் குடியிருப்பு அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. அக்குடியிருப்பில், ஆண்டுதோறும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விழாவைத் தேர்வு செய்வர். இந்த ஆண்டு, 'உணவுத்திருவிழா' கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

கலா, தனது நண்பர்களான இரமணி, முகிலன் ஆகியோரைத் தன் இல்லத்திற்கு அழைத்திருந்தாள். விழா நாளன்று, குறித்த நேரத்திற்கு முன்னரே அவர்கள் இருவரும் வந்துவிட்டார்கள். கலா, அவர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்று அழைத்துச் சென்றாள்.

கலா : இரமணி, முகிலன்... நீங்கள் இருவரும் வந்ததில் மிக்க மகிழ்ச்சி. வாருங்கள், கண்காட்சி அரங்குகளைக் காண்போம்.

இரமணி: எங்களுக்கும் மகிழ்ச்சி, கலா. உணவுப் பொருள்களில் இத்தனை வகைகளா? பார்க்கப் பார்க்க வியப்பாக இருக்கிறதே....!

கலா: எத்தனை வகையான உணவு வகைகள் என்பதனைவிட, இந்த உணவு வகைகளை ஏன் நாம் உண்ண வேண்டும் என்பதுதான் இன்றியமையாதது. ஒவ்வொரு வகை உணவையும் உண்பதனால் நமக்குக் கிடைக்கும் சத்துகள், மருத்துவப் பயன்கள் பற்றி விளக்கமாகக் கூறுகிறார்கள்; விளக்கப் பலகைகளும் வைத்திருக்கிறார்கள்.

இரமணி: தேனும் தினைமாவும் இதுவரை கேள்விப்பட்டிருக்கிறேனே தவிர, சாப்பிட்டது இல்லை. தினை, வரகு, சாமை, குதிரைவாலி முதலிய அரிசி வகைகளில் நார்ச்சத்தும், உயிர்ச்சத்தும், தாதுஉப்புகளும் மிகுதியாம். இவைதாம் நம் மக்கள் தலைமுறை தலைமுறையாய் உண்டுவரும் உணவாம்.

முகிலன்: கோதுமை மாவு, அரிசி மாவு தோசைகள்தாம் இதுவரை சாப்பிட்டிருக்கிறோம். இங்கேயோ, கம்பந்தோசை, கேழ்வரகுத்தோசை, சோளத் தோசை, முடக்கற்றான் தோசை எனப் பலவிதமான தோசைகள். பார்த்ததுமே சுவைக்கத் தூண்டுகின்றனவே! கம்பந்தோசை மட்டுமல்லாமல் கம்பங்கூழ், களி, கம்பு மாவு உருண்டை எனப் பலவகை உணவுகள் வைக்கப்பட்டுள்ளனவே. கம்பு நார்ச்சத்தும் மாவுச்சத்தும் மிகுந்ததாம்.

கம்பு

கலா: ஆம், முகிலன். இவை சுவைக்க மட்டுமன்றிச் சீரான உடல்நலத்திற்கும் தேவை, நாம் இப்போதெல்லாம் இவற்றை வீட்டில் ஆக்குவதனையே மறந்துவிட்டோம்.

இரமணி: சோள மாவில் மட்டும் எத்தனை உணவு வகைகள் பாரேன்! சோளச்சோறு, சோளப்பிட்டு சோளமாவு உப்புமா, எல்லாம் சுடச்சுடத் தருகிறார்கள். சோளத்தில் உயிர்ச்சத்து 'ஏ' மிகுதியாம். சோளம் புரதச்சத்து மிகுந்துள்ளதனால், உடல் வளர்ச்சிக்கான ஆற்றலைத் தருகிறதாம்.

சோளம்

கேழ்வரகு

முகிலன் : கேழ்வரகுப் பலகாரங்களின் பெயர்களைக் கேட்டதுமே தின்ன ஆசையாக இருக்கிறது. கேழ்வரகுக் கூழ், களி, கஞ்சி, அடை, வடை, அதிரசம், பணியாரம் எல்லாம் சுவையும் பயனும் மிக்கவை. உடலுக்குத் தேவையான கால்சியம் சத்துமிக்க உணவு, கேழ்வரகு என்கிறார்கள்.

கலா: ஆவிமூலம் வேக வைக்கப்படும் உணவுகளில் தான் எத்தனை வகைகள் பாருங்கள்? எத்தனை வண்ணங்கள்? எத்தனை வடிவங்கள்? சிவப்பரிசிப் பிட்டு, கொழுக்கட்டை, இடியாப்பம், வெண்பிட்டு, வேக வைத்த சீனிக் கிழங்கு, பனங் கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு இவையெல்லாம் புரதச்சத்து மிக்கவையாம்; நோய் எதிர்ப்புச்சத்துக்கு உதவுகின்றனவாம்.

கேழ்வரகுக் கூழ்

முகிலன்: பக்கத்து அரங்கிலே பாருங்கள். சுண்டல் மணம் நம்மைச் சுண்டி இழுக்கிறதே! புரதச்சத்து மிக்க, உடல் வளர்ச்சிக்கு உதவுகிற முளைகட்டிய பாசிப்பயறு, சுண்டல், நவதானியச் சுண்டல், கொண்டைக் கடலை, தட்டைப்பயறு, மொச்சை எனப் பயறு வகைகளில் பக்குவமான தின்பொருள்கள் வழங்கப்படுகின்றன. வாருங்கள், ஒவ்வொரு கை அள்ளித் தின்னுவோம்.

சுண்டல்

கலா: இதோ, கீரை வகைகளின் பிரிவு. கீரை வகையும், கீரைத்தோசையும் மணக்கின்றன. கீரைகளில் இரும்புச் சத்தும், தாது உப்புகளும் மிகுதியாக உள்ளன; தெளிவான கண்பார்வைக்குக் கீரைகள் உதவுகின்றன; இரத்தத்தில் சிவப்பணுக்கள் உருவாக உதவுகின்றன.

கீரை

இரமணி: இதோ பார், முகிலா! உன்னை மாதிரி உடம்பு இளைத்தவர்களுக்கு, 'எள்ளு' ஏற்ற உணவு என எழுதியிருக்கிறார்கள்; எள்ளுணவு கொழுப்புச் சத்துத் தரவல்லது; குடற்புண்களை ஆற்றவும் கூடியதாம். எள்ளுருண்டை, எள்ளுப்பணியாரம், எள்ளுமாவு, எள்ளுப்பொடி என வகைவகையான உணவுகள் இருக்கின்றனவே.

எள்ளுருண்டை

முகிலன்: கலா... இந்த உணவுத்திருவிழா அரங்கில் சுற்றிச் சுற்றிக் கால்கள் ஓய்ந்து விட்டன... கொஞ்சம் சூடாக ஏதாவது குடித்தால் நன்றாக இருக்குமே...

கலா: இதோ, இந்த அரங்குக்குப் போகலாம், வா! நாம் மறந்தே போய் விட்ட இயற்கையான நீரும் சாறும் இருக்கின்றன. சூடான சுக்குநீர், குளிர்ந்த பதநீர், நினைவாற்றல் தரும் வல்லாரைச் சாறு, குளிர்ச்சி தரும் பனங்கற்கண்டுச் சாறு, காமாலை நோய் தீர்க்கும் கீழாநெல்லிச்சாறு, அறுகம்புல் சாறு, இளநீர் இவற்றுள் என்ன வேண்டுமோ? அதனைப் பருகுங்கள்...

அறுகம்புல் சாறு

முகிலன்: அருமையான கேழ்வரகுக் கஞ்சி! சூடான சுவையான சுக்கு நீர்...! இந்த அரிய உணவுத் திருவிழாவுக்கு எங்களை அழைத்ததற்கு மிகவும் நன்றி, கலா.

கலா: நீங்கள் இருவரும் இங்கே வந்ததில் எனக்கும் மெத்த மகிழ்ச்சி, நன்றி. இனிமேல், இத்தகைய இயற்கையான, சத்தான உணவு வகைகளையே உண்ணப் பழகுவோம்! உடல்நலம் காப்போம்!

பயிற்சி

அ. அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

அரங்கு –

முடக்கற்றான் –

ஆ. பிரித்து எழுதுக.

1. விழிப்புணர்வு = _____
2. உணவுத்திருவிழா = _____
3. குடற்புண் = _____
4. சிவப்பணுக்கள் = _____
5. எள்ளுருண்டை = _____.

இ. விடை எழுதுக.

1. கீரை உண்பதனால் கிடைக்கும் பயன்கள் யாவை?
2. ஆவியில் வேக வைக்கப்படும் உணவு வகைகள் சிலவற்றை எழுதுக.
3. உன் ஊரில் விளையும் சத்தான உணவுப் பொருள்கள் யாவை?

இணைந்து செய்வோம்

அ. குறிப்புகளைப் பயன்படுத்தித் தன் வரலாறு எழுதுக.

என் பெயர் இட்டலி. அரிசி மற்றும் உளுந்தைப் பயன்படுத்திச் செய்யப்படுகிறேன். என்னை ஆவியில் வேகவைப்பதனால் உடலுக்கு நல்லது செய்வேன்.

எள்ளுருண்டை: நான் இனிப்பாக இருப்பேன்.
தேவையான பொருள் எள்ளு, வெல்லம்.

ஆ. விளம்பரங்கள் உருவாக்கலாமா ?

இ. கருத்து வரைபடத்தை நிறைவு செய்க.

நார்ச்சத்து, மாவுச்சத்து

கம்பங்கூழ்

களி

கம்பந்தோசை

கம்புமாவு உருண்டை

கம்பு

கேழ்வரகு

சத்தான உணவு வகைகள்

சோளம்

வரகு

குழுவாகச் செய்வோம்

அ. இணைப்புச் சொல்லை அடிக்கோடிட்டு எடுத்து எழுதுக.

காலை உணவு என்பது மிகவும் இன்றியமையாதது. ஏனெனில், இரவு உணவுக்குப் பின் ஏழு, எட்டு மணிநேரம் உறக்கம் ஒருவருக்குத் தேவை. ஆகவே, ஆழ்ந்து உறங்குகிறோம்; அந்த நேரம் முழுவதும் உணவு ஏதும் உண்பது இல்லை. எனவே, காலை உணவைத் தவிர்த்தல் கூடாது. ஆனால், நம்மில் பலரும் காலை உணவை உண்பதில்லை; அதனால், தவறாமல் காலை உணவு உட்கொள்ளுதல் வேண்டும்.

ஆ. வகுப்பறையில் பேசுக.

மாணவர்களைச் சிறு குழுக்களாகப் பிரிக்கவும். ஒவ்வொரு குழுவில் உள்ளவர்களையும் ஒரு வாரத்தில் தங்கள் வீட்டில் செய்த உணவுகளைப் பட்டியலிடச் செய்யவும். பட்டியலில் இடம்பெற்ற சத்தான உணவுகளைத் தனியே எடுத்து எழுதி, வகுப்பறையில் படித்துக் காட்டச் சொல்லுக.

இ. தொடர் உருவாக்குக.

குழந்தைகளை வட்டமாக உட்காரச் செய்யவும். ஒரு குழந்தையை வினைச்சொல்லைக் கொண்டு முடியும் தொடரைக் கூறச் செய்யவும். அடுத்த குழந்தை, அச்சொல்லை முதலாகக்கொண்டு தொடரை உருவாக்கச் செய்யவும். இவ்வாறு தொடர்ந்து விளையாடி மகிழவும்.

(எடுத்துக்காட்டு)

பூங்குழலி, தோட்டத்திற்குச் சென்றாள்.
சென்று மல்லிகைப்பூவைப் பறித்தாள்.
பறித்த .....

அறிந்து கொள்வோம்

அ. உயிரெழுத்தில் ஓர் எழுத்து ஒரு மொழி

ஆ – பசு	ஏ – அம்பு
ஈ – தேனீ	ஐ – தலைவன்
ஊ – தசை	ஒ – மகிழ்ச்சி

ஆ. தொகைச்சொற்களை விரித்தறிவோம்.

முக்கனி	–	மா, பலா, வாழை
இருதிணை	–	உயர்திணை, அஃறிணை
முத்தமிழ்	–	இயல், இசை, நாடகம்
நாற்றிசை	–	கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு
ஐந்திலக்கணம்	–	எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி
அறுசுவை	–	இனிப்பு, துவர்ப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, கார்ப்பு

முளைகட்டிய தானியக் கலவையைச் செய்துபார்

தேவையான பொருள்கள்: பச்சைப் பயறு, துருவிய தேங்காய், நாட்டுச்சர்க்கரை.

செய்முறை: பச்சைப் பயற்றைத் தண்ணீரில் காலையில் ஊற வைக்கவும். மாலையில் அதனை ஒரு துணியில் கட்டித் தொங்கவிடவும். அது மறுநாள் முளைவிட்டிருக்கும். அதனை ஒரு பாத்திரத்தில் கொட்டி, அதனுடன் தேங்காய்த்துருவல், நாட்டுச்சர்க்கரை சேர்த்துக் கிளறவும். இப்பொழுது சுவையான தானியக் கலவையைச் செய்திருப்பீர்கள்.

செயல் திட்டம்

கோடைக்காலம் வந்ததுமே தமிழ்நாட்டுச் சிற்றூர்கள் அனைத்திலும் கூழ் வார்க்கும் திருவிழாக்கள் நடைபெறுகின்றன. கோடையின் வெம்மையைக் குறைப்பதற்கான ஓர் உணவாக இது பயன்படுகிறது. இதேபோல், காலநிலைக்கேற்ற உணவுப் பழக்கங்களை ஊரில் உள்ள பெரியவர்களிடம் நேர்காணல் செய்து செய்திகளைத் திரட்டவும்.

சிந்திக்கலாமா ?

நீ உண்ண விரும்பும் உணவு எது எனக் கலந்துரையாடுக.

துணைப்பாடம்

ஒற்றுமையே பலம்

ஒருநாள் மாலைப்பொழுது. மலர்விழி விளையாட்டாய்த் தன் ஐந்து விரலிலும் முகங்களை வரைந்தாள். சிறிது நேரத்தில் அவை பேசத் தொடங்கின.

கையிலுள்ள ஐந்து விரலுக்குள் 'யார் சிறந்தவர்' என்னும் போட்டி! ' நீயா? நானா?' என்னும் கருத்தாடல். அது வாய்ச்சண்டையாக மாறியது. "என் உதவியின்றிச் சின்னஞ்சிறு பொருளைக்கூட உங்களால் தூக்க முடியாது", எனச் செருக்குடன் கூறியது கட்டை விரல். 'சும்மா கிட! தற்பெருமை கொள்ளாதே. அவன், அவள், அது, இது எனச் சுட்டிக் காட்டுவது நான் தானே.' 'நானே சிறந்தவன்' என்றது, சுட்டு விரல்.

"நாம் எல்லாரும் வரிசையாக நிற்போம். உயரமானவர் யார் எனப் பார்த்துவிடலாம்" எனச் 'சூளுரைத்தது' நடுவிரல். "விலையுயர்ந்த மோதிரம் அணிவிப்பது யாருக்கு? எனக்குத்தான்' என் பெயரே, 'மோதிரவிரல்'. உங்கள் நால்வரினும் செல்வாக்குமிக்கவன் நானே!" எனப் 'பெருமை பேசியது' மோதிரவிரல். "கைகூப்பி வணக்கம் சொல்லும்போது, முதலில் நிற்பவன் நான். எனக்குப்பின்தான், நீங்கள் எல்லாரும். எனவே, 'நானே பெரியவன்' " என்றது, சுண்டுவிரல்.

அப்போது, 'செல்பேசி' ஒலித்தது. "மலர்விழி... அதனை எடுத்துவா!" என்றார், அம்மா. இதுவரை கருத்தாடல் செய்து கொண்டிருந்த ஐந்து விரலும் தங்களை மறந்து ஒன்று சேர்ந்தன; ஒன்றையொன்று பார்த்துக்கொண்டன.

அவை என்ன பேசியிருக்கும்?

குழுவாகச் செய்வோம்

கொட்டைகள், கற்கள், மணிகள் ஆகிய பொருள்களைக் கலந்து வைக்கவும். குழந்தைகளைக் குழுக்களாகப் பிரிக்கவும். ஒவ்வொரு குழுவினரிடமும் அக்கலவைப் பொருள்களைக் கொடுக்கவும். எந்தக் குழு முதலில் அப்பொருள்களைத் தனித்தனியாகப் பிரித்து எடுக்கிறதோ அக்குழுவே வெற்றி பெற்ற குழு. ஒவ்வொரு குழுவும் தாங்கள் அப்பொருள்களைப் பிரித்தெடுக்க எந்த முறையைப் பின்பற்றினார்கள் என்பதனைக் கூறச்செய்யவும். அனைவரும் இணைந்து செயல்பட்ட குழுவே வெற்றியடைந்திருக்கும். அதனைக் குறித்துக் குழந்தைகளுடன் பேசுங்கள்.

கும்மியடி பெண்ணே கும்மியடி

கும்மியடி! தமிழ்நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோ மென்று கும்மியடி! (கும்மியடி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று
எண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மியடி)

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டும் அறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப் பில்லை காணென்று கும்மியடி! (கும்மியடி)

– மகாகவி சுப்பிரமணிய பாரதியார்

பாடலைக் குழுவாக இனிய மெட்டமைத்துப் பாடுங்கள்.

ஆசிரியர் குறிப்பு

பெயர்	–	சுப்பிரமணிய பாரதியார்
ஊர்	–	எட்டயபுரம்
பெற்றோர்	–	சின்னசாமி, இலக்குமி அம்மையார்
சிறப்புப்பெயர்	–	தேசியக்கவி, மகாகவி
காலம்	–	11.12.1882 முதல் 11.09.1921 வரை

கும்மி – விளக்கம்

கும்மிப்பாடல் நாட்டுப் பாடல்களில் ஒரு வகை ஆகும். பெண்கள் வட்டமாய் நின்று கைகொட்டிப் பாடி, ஆடுவது கும்மிப் பாடல். பெண்கள் அணிந்திருக்கும் வளையலின் ஓசையும், கைகொட்டும் ஓசையும் பாட்டுக்குத் தாளமாக அமைவது கும்மிப் பாடலின் சிறப்பு ஆகும்.

பயிற்சி

அ.அகரமுதலியைப் பார்த்துப் பொருள் எழுதுக.

ஏடு –

மாய்ந்து –

பாரினில் –

இளைப்பில்லை –

ஆ.பிரித்து எழுதுக.

1. தீமையென்று = _____
2. எண்ணியிருந்தவர் = _____
3. ஆணுக்கிங்கே = _____

இ. விடை எழுதுக.

1. பாரதியார் பற்றிக் குறிப்பு வரைக.
2. கும்மிப்பாடல் உணர்த்தும் கருத்துகள் யாவை?
3. பாடலில் உங்களுக்குப் பிடித்த அடிகள் எவை? ஏன்?

குழுவாகச் செய்வோம்

அ. பாடலை நிறைவு செய்க.

1. கும்மியடி பெண்ணே! பள்ளி முழுவதும்
   குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி
   நம் பள்ளித் தூய்மையைக் காத்திடுவோம்
   என நம்பிக்கைக் கொண்டிங்குக் கும்மியடி...

ஆ. வீட்டில் ஆண், பெண் குழந்தைகளுக்குச் சம உரிமைகள் அளிக்கப்படுகின்றன. 'ஆம்' 'இல்லை' என்னும் தலைப்பில் பட்டிமன்றம் நடத்துக.

சித்திரைப் பொருட்காட்சி

அப்பா, அம்மா, தம்பி, தங்கை அனைவருடனும் ஆதவன் எழும்பூர்த் தொடர்வண்டி நிலையத்திற்கு வந்து சேர்ந்தான். அவனுக்குக் கோடை விடுமுறை தொடங்கிவிட்டது. மதுரையில் ஆதவனின் மாமா இருக்கிறார். எனவே, அனைவரும் மகிழ்ச்சியுடன் புறப்பட்டுத் தொடர்வண்டி நிலையம் வந்துள்ளனர்.

எழும்பூர்த் தொடர்வண்டி நிலைய வாயிலில் அவர்கள் நுழைந்தார்கள். தொடர்வண்டி புறப்படும் சத்தம் கேட்டது. "அப்பா, தொடர்வண்டி போய்விடப் போகிறது..." பதட்டத்தில் சொன்னான், ஆதவன்.

"ஆதவன், நாம் செல்ல வேண்டியது 'பாண்டியன் அதிவிரைவு வண்டி'. அது 09:15 மணிக்குத்தான் புறப்படும். அதோ பார்! பயண அறிவிப்புப் பலகை. அதில் தொடர்வண்டியின் பெயர், வண்டி எண், நிற்கும் இடம் ஆகியன குறிப்பிடப்பட்டுள்ளன" என்றார், அப்பா. ஆதவன் ஆர்வத்துடன் அறிவிப்புப் பலகையைப் பார்த்தான்.

வண்டி எண்	வண்டியின் பெயர்	புறப்படும் நேரம்	நடை மேடை
2661	செங்கோட்டை பொதிகை விரைவு வண்டி	20:05	6
2631	நெல்லை அதிவிரைவு வண்டி	20:50	5
2637	மதுரை பாண்டியன் அதிவிரைவு வண்டி	21:15	4
6701	இராமேசுவரம் விரைவு வண்டி	21:40	3

“அப்பா, பாண்டியன் அதிவிரைவு வண்டி புறப்படும் நேரம் இரவு 09:15 மணி எனச் சொன்னீர்கள். ஆனால், பலகையில் 21:15 என எழுதி உள்ளதே; ஒன்றுமே புரியவில்லையே?” என ஆதவன் கேட்டான். அதற்கு அவர், இரயில்வே துறையில் நேரம் 24 மணி அடிப்படையில்தான் கணக்கிடப்படுகிறது. அதனால்தான், இரவு 09:15 என்பதனை 21:15 என எழுதியுள்ளனர்.

“அப்படியானால், 20:05 மணி என்றால் இரவு 08:05 தானே அப்பா?” எனக் கேட்டான், ஆதவன். “சரியாகச் சொன்னாய். சரி வாருங்கள். நாம் செல்லவேண்டிய தொடர்வண்டியின் கதவுகள் திறக்கப்பட்டுவிட்டன; ஏறிக்கொள்வோம்” என்றார், அப்பா.

தொடர்வண்டி புறப்பட்டது; வெகுவிரைவாகச் சென்றது. அயர்ந்து தூங்கிய ஆதவன், கண் விழித்துப் பார்த்தான்; மதுரைச் சந்திப்பு என எழுதப்பட்ட பெயர்ப்பலகை தெரிந்தது; அனைவரும் இறங்கினர்.

மதுரைச் சந்திப்பின் வாயிலில் பெரிய விளம்பரப்பலகை ஒன்று வைக்கப்பட்டு இருந்தது. அதனை ஆதவனும் மற்றவர்களும் பார்த்தார்கள். அந்த விளம்பரத்தில்...

சித்திரைப் பொருட்காட்சி

இடம் : தமுக்கம் மைதானம், நாள் : 03.05.2012 – 30.05.2012

- நூல்கள்
- கைவினைப் பொருள்கள்
- விளையாட்டுப் பொருள்கள்
- கைத்தறித் துணிகள்
- பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்

அனைவரும் வருக! கண்டு மகிழ்க! ஆதரவு தருக!

“அம்மா, பொருட்காட்சி மிக நன்றாக இருக்கும் போலிருக்கிறதே, அங்குப் போகலாமா?” எனக் கேட்டான் ஆதவன். அதற்கு அம்மா, “இப்பொழுதுதான் வந்திருக்கிறோம்; நாளை அங்குப் போகலாம். இப்பொழுது மாமா வீட்டிற்குச் செல்வோம்” எனக் கூறினார்.

பேருந்து எண்	ஊர்	புறப்படும் நேரம்
3	பழங்காநத்தம்	6:30 மு.ப.
4	தெப்பக்குளம்	7:00 மு.ப.
2	புதூர்	7:15 மு.ப.
23	திருப்பாலை	7:30 மு.ப.
75	மேலூர்	7:35 மு.ப.

அவர்கள் புதூர் செல்வதற்காகப் பெரியார் பேருந்து நிலையத்தை அடைந்தார்கள். ஆதவன், அங்கு வைக்கப்பட்டிருந்த பேருந்துக் கால அட்டவணையைச் சுட்டிக் காட்டினான். "அப்பா, புதூர் செல்லும் பேருந்து எண்ணும், புறப்படும் நேரமும் குறிப்பிடப்பட்டுள்ளன" எனச் சொன்னான்.

அப்பொழுது, புதூர் செல்லும் 2ஆம் எண் பேருந்து வந்தது. அதில் ஏறி, அனைவரும் மாமா வீட்டை அடைந்தனர்.

மறுநாள் ஆதவன், மாமாவுடன் இரு சக்கர வண்டியில் பொருட்காட்சிக்குச் சென்றான். நுழைவுச்சீட்டை மாமா வாங்கினார். இருவரும் உள்ளே சென்றனர். இருவரும் பொருட்காட்சியைச் சுற்றிப் பார்த்தனர்; இராட்டினத்தில் சுற்றினர். நூல் விற்பனை மையம் இருந்தது. அதில் பயனுள்ள அறிவியல் நூல்களையும், பொழுதுபோக்குக் கதைப்புத்தகங்களையும் அவனுக்கு மாமா வாங்கித் தந்தார்; பந்து, பொம்மைகள், கைக்குட்டை ஆகியவற்றையும் வாங்கினார்.

இருவரும் சிற்றுண்டி உண்டபின் வீட்டிற்குப் புறப்பட்டனர். ஆதவன், மதுரை நகரின் ஒழுங்கான தெருக்களையும் விளம்பரங்களையும் பார்த்தவாறே வீடு சென்று சேர்ந்தான்.

பயிற்சி

அ. வகுப்பறையில் பேசுக.

1. நியாய விலைக்கடையில் எழுதிவைக்கப்பட்டிருக்கும் அறிவிப்புகளையும் விலைப் பட்டியலையும் படித்து அறிக.
2. பள்ளி ஆண்டு விழா, திருமண விழா அழைப்பிதழ்களைத் திரட்டிப் படித்து வருக.

ஆ. பிரித்து எழுதுக.

1. தொடர்வண்டி = _____
2. வண்டியிலிருந்து = _____
3. பொருட்காட்சி = _____
4. நுழைவுச்சீட்டு = _____
5. எழுதியிருந்தது = _____

இ. சேர்த்து எழுதுக.

1. கணக்கு + இடப்படும் = _____
2. பயன் + உள்ள = _____
3. வாங்கி + தந்தார் = _____
4. கை + குட்டை = _____

ஈ. வினாக்களுக்கு விடை எழுதுக .

1. ஆதவன் தொடர் வண்டியில் எங்குச் சென்றான் ?
2. சித்திரைப் பொருட்காட்சி எந்த ஊரில் எப்பொழுது நடைபெற்றது ?

இணைந்து செய்வோம்

அ .செய்தித்தாள் படித்துக் கருத்து வரைபடம் அமைக்க

கின்னசுச் சாதனை

சென்னை: ஜூன்–10 நேரு உள்விளையாட்டு அரங்கில் உலகச் சுகாதார அமைப்பு சார்பில் ஒரே நேரத்தில் 15,115 மாணவர்கள் கை கழுவிய நிகழ்ச்சி, 'கின்னசுச் சாதனைப்' புத்தகத்தில் இடம் பெற்றுள்ளது.

இது குறித்துத் தமிழக நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் வெளியிடப்பட்ட அறிக்கை.

கைகள் சுத்தமாக இல்லாமல் இருப்பதனால், குழந்தைகளுக்கு வயிற்று நோய் ஏற்படுகிறது. உணவு உண்பதற்கு முன்பும், கழிவறையில் இருந்து வந்த பின்பும், சோப்புப்போட்டுக் கை கழுவுவது மிகவும் நல்லது. இதனால் குழந்தைகளுக்கு ஏற்படும் நோய்களை 25 சதவீதம் தடுக்கலாம். இதனைக் கருத்தில் கொண்டு உலகச் சுகாதார நிறுவனம் ஒவ்வோர் ஆண்டும், அக்டோபர் 15ஆம் நாளை, 'உலகக் கை கழுவும் நாள்' என அறிவித்துள்ளது. உலகச் சுகாதார நிறுவனம் சார்பில் நடைபெற்ற கை கழுவும் நிகழ்ச்சியில் சென்னை மாநகராட்சி மற்றும் தனியார் பள்ளிகளைச் சேர்ந்த 15,115 மாணவ, மாணவிகள் ஒரே நேரத்தில் கைகளைக் கழுவிச் சாதனை படைத்தார்கள்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆ. தலைப்புச் செய்திகளை விரிவான செய்திகளாக மாற்றிச் செய்தி வாசிப்பாளர் போல் வாசியுங்கள்.

கன மழை ...
உழவர் மகிழ்ச்சி

நிலநடுக்கத்தால்
கட்டடங்கள் குலுங்கின ...

கபடி
இந்தியா வியத்தகு வெற்றி ...

இ. உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சி ஒன்றனுக்கு அழைப்பிதழ் உருவாக்குக.

இன்றைய செய்தியாளர்

ஒருநாள் முழுவதும் பள்ளி அல்லது சுற்றுப்புறத்தில் நடைபெறும் நிகழ்வுகளை உற்றுநோக்குக. அவற்றில் உன்னைக் கவர்ந்த அல்லது பாதித்த நிகழ்வுகளைச் செய்தியாக மாற்றுக. அடுத்த நாள் காலைக் கூட்டத்தில் படித்துக்காட்டுக.

பள்ளியின் கால அட்டவணையை இரயில்வே நேரத்தில் மாற்றி அமைத்து எழுதுக.

துணைப்பாடம்

காடையின் நுண்ணறிவு

ஓர் அறுவடைக் காலம். நெல் வயலில் பயிர்கள் நன்கு வளர்ந்து கதிர்கள் முற்றியிருந்தன. அந்த வயலுக்குள், காடைப்பறவை ஒன்று கூடுகட்டித் தன் குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தது. குஞ்சுகளுக்கு இன்னும் முழுமையாக இறகுகள் வளரவில்லை.

ஒருநாள், தாய்ப்பறவை இரை தேடுவதற்காக வெளியில் சென்றிருந்தது. அப்போது, வயலின் சொந்தக்காரர் வயலைச் சுற்றிப் பார்த்தார். 'கதிர்கள் நன்றாக முற்றிவிட்டன; நாளையே அண்டை அயலார் உதவியுடன் அறுவடை செய்ய வேண்டும்' எனத் தனக்குத்தானே கூறிக்கொண்டே சென்றார்.

அச்சமடைந்த குஞ்சுகள், தாய்ப்பறவை கூட்டுக்குத் திரும்பியவுடன் நடந்ததனைக் கூறின. தாய்ப்பறவை, "என் செல்வங்களே ... கவலைப்படாதீர்கள்! அண்டை அயலார் ஒவ்வொருவரும் தங்கள் வேலைகளில் ஈடுபட்டிருப்பர். எனவே, நாளை வயலின் சொந்தக்காரர் அறுவடை செய்ய வரமாட்டார்; பொறுத்திருப்போம்" எனக் கூறியது.

மறுநாள் காலை வயலுக்கு வந்த வயலின் சொந்தக்காரர், மிகவும் கவலையுடன், 'நாள்கள் தள்ளிப் போனால் நெல் வீணாகி விடுமே! சுற்றத்தாரைக் கொண்டாவது நாளையே அறுவடை செய்ய வேண்டும்' என நினைத்துக்கொண்டே சென்றார்.

மாலை, கூட்டுக்குத் திரும்பிய தாய்ப்பறவையிடம் குஞ்சுகள் மீண்டும் முறையிட்டன. அப்போதும் தாய்ப்பறவை, "என் கண்மணிகளே... நாளையும் அவர் அறுவடை செய்யமாட்டார்; ஏனெனில், சுற்றத்தாருக்கும் நெல்வயல்கள் இருக்கும். அவர்கள் வருவதும் ஐயம்தான்; எனவே, பொறுத்திருப்போம்" எனக் கூறியது.

மறுநாள் வயலைப் பார்க்க வந்த வயலின் சொந்தக்காரர், 'இனி, யாரையும் நம்பிப் பயனில்லை. நாளையே குடும்பத்தினருடன் வந்து அறுவடை செய்துவிட வேண்டியதுதான்' என எண்ணியவாறே சென்றார். மாலையில் கூட்டுக்குத் திரும்பிய தாய்ப்பறவை நடந்ததனை அறிந்தவுடன், "குழந்தைகளே, நாம் உடனே பாதுகாப்பான வேறு ஓர் இடத்துக்குச் செல்ல வேண்டும்" எனக் குஞ்சுகளைப் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்றது.

காடையின் முடிவு பற்றிக் குழுவில் கலந்துரையாடுங்கள்; கருத்துகளை வெளியிடுங்கள்.

வேறுபாடுகளைக் கண்டுபிடிக்க.

இணைந்து செய்வோம்





அகரமுதலி

அண்டை வீடு	–	பக்கத்து வீடு
அரங்கு	–	கூடம்
அன்னை	–	தாய்
இளைப்பில்லை	–	தாழ்வில்லை
உருவு	–	உருவம்
எள்ளாமை	–	இகழ்ந்துபேசாமை
ஏடு	–	புத்தகம்
கடிதாய்	–	விரைவாய்
கயமை	–	கீழோரது தன்மை
சொல்லியவண்ணம்	–	சொல்லியபடி

நல்கியது	–	கொடுத்தது
படியும்	–	அமையும்
பாடசாலை	–	பள்ளிக்கூடம்
பாமரர்	–	படிக்காதவர்
பார்	–	உலகம்
புதல்வி	–	மகள்
மடமை	–	அறிவின்மை
மாய்ந்து	–	இறந்து
முடக்கற்றான்	–	ஒரு வகை மூலிகை
மேதை	–	அறிவாளி

	திறன் / திறன் பகுதி	இயல் எண்
1.	கேட்டல்	
1.1	விழிப்புணர்வுப் பாடல்களைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்	இயல்–2, 3, செய்யுள்
1.2	கலந்துரையாடலைக் கேட்டுப் புரிந்துகொள்ளுதல்	
2.	பேசுதல்	
2.1	உரிய ஒலிப்புடன் பேசுதல்	இயல்–2, 3 உரைநடை
2.2	இயல்பாக உரையாடுதல்	
3.	படித்தல்	
3.1	எளிய எண் விவரங்களைப் படித்தறிதல்	இயல்–3 உரைநடை
3.2	செய்தித்தாள் படித்தல்	இயல்–3 பயிற்சி
4.	எழுதுதல்	
4.1	பொருள் உணர்வுக்கேற்ப இடைவெளிவிட்டு எழுதுதல்	அனைத்து இயல்கள் பயிற்சி
4.2	பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுதல்	இயல்–1, 2
4.3	கட்டுரை / உரையாடல் எழுதுதல்	
5.	படைப்பாற்றல்	
5.1	பாடல் எழுதுதல், பாடுதல்	இயல்–2
5.2	செயல்திட்டம்	இயல்–1
6.	நடைமுறை இலக்கணம்	
6.1	பேச்சு வழக்கு இலக்கிய வழக்கு	இயல்–1 பயிற்சி
6.2	இணைப்புச் சொற்களை அறிந்து பயன்படுத்துதல்	இயல்–2 பயிற்சி
6.3	மரபுத் தொடர்கள் அறிதல்	
6.4	அறிந்துகொள்வோம்	
7.	தானே கற்றல்	
7.1	சிறுசிறு கதைகளைப் படித்தல்	துணைப்பாடம் , அனைத்து இயல்கள்
7.2	அகரமுதலியைப் பயன்படுத்திப் பொருளறிதல்	அகரமுதலி
8.	சொல்லாட்சித் திறன்	செய்யுள் பகுதிகள் மற்றும் அனைத்து இயல்கள்
8.1	சொற்களஞ்சியம் பெருக்குதல்	

‘என்னால் முடியும், நான் செய்தேன்’

(‘I can, I did’)

மாணவர் கற்றல் செயல்பாடுகள் பதிவேடு

பாடம்

வ எண்	நாள்	பாட எண்	பாடத் தலைப்பு	செயல்பாடுகள்	குறிப்புரை

ENGLISH

STANDARD FIVE

TERM II

Note to the Teacher:

